<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண். 149/2019

இன்று 2024 ம் ஆண்டு நவம்பர் திங்கள் 08 ம் நாள் இன்று இந்த வா.சா.1 ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.T.பிரவின்குமார், B.A.,B.L., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

பெயர் : ஸ்ரீதர்

தந்தை பெயர் : சந்திரமோகன்

<u>முதல் விசாரணை தொடர்ச்சி</u>

நான் இவ்வழக்கில் வாதி ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு தயார் செய்யப்பட்டவை ஆகும். அவற்றை நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்திருக்கிறேன்.

கடந்த 10-07-1995 ம் தேதியிட்ட பாக சாசனத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.1** ஆகும். கடந்த 22-07-2015 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.2** ஆகும். கடந்த 22-07-2015 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண் 3630/2015 ன் கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகும். கடந்த 22-07-2015 ம் தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவண எண் 3631/2015 ன் கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆகும். கடந்த 15-03-2016 ம் தேதியிட்ட அடமானக் கடன் பத்திரத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆகும். கடந்த 04-05-2016 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.6** ஆகும். கடந்த 04-05-2016 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ரத்து ஆவண எண் 2399/2016 ன் கணினி நகல் **வா.சா.ஆ.7** ஆகும். கடந்த 04-05-2016 ம் தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவண எண் 2401/2016 ன் கணினி நகல் **வா.சா.ஆ.8** ஆகும். கடந்த 29-12-2017 ம் தேதியிட்ட அடமானக் கடன் பத்திரத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.9** ஆகும். கடந்த 13-08-2015 ம் தேதியிட்ட மண்டல துணை வட்டாட்சியரின் உத்தரவு **வா.சா.ஆ.10** ஆகும். கடந்த 13-08-2015 ம் தேதியிட்ட மண்டல துணை

வட்டாட்சியரின் ஆவண எண் 3631/2015 க்கு தொடர்பான உத்தரவு **வா.சா.ஆ.11** ஆகும்.கடந்த 13–08–2015 ம் தேதியிட்ட மண்டல துணை வட்டாட்சியரின் ஆவண எண் 3629/2015 க்கு தொடர்பான உத்தரவு **வா.சா.ஆ.12** ஆகும். பட்டா எண் 775 க்கான அடங்கல் கணக்கு நகல் **வா.சா.ஆ.13** ஆகும். டவுன் சர்வே ரிஜிஸ்டரின் நகல் **வா.சா.ஆ.14** ஆகும். 19–02–2019 ம் தேதியிட்ட கணினி வழியிலான டவுன் சர்வே ரிஜிஸ்டரின் நகல் **வா.சா.ஆ.15** ஆகும். கடந்த 15–02–2019 ம் தேதியிட்ட கணினி வழியிலான வில்லங்கச் சான்றிதழ் **வா.சா.ஆ.16** ஆகும்.

மேலே கண்ட ஆவணங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்து தாவாவை அனுமதித்து உத்தரவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

T PRAVEEN KUMAR

Digitally signed by T PRAVEEN KUMAR
Date: 2024.11.08 16:29:27 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.